காலை 6.30க்குள் உங்கள் கையில் தினமலர் கிடைக்க... 98940 - 09411

# ரூ.ஒரு கோடி

## மீனாட்சி அம்மன் கோயில் கடை வாடகை பாக்கி

## பட்டியலை வெளியிட்டு கெடு விதித்தது நிர்வாகம்

மதுரை, நவ. 5 -

***மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கடைகளில் வியாபாரம் செய்பவர்களில் பலர், ஒரு கோடி ரூபாய் வாடகை பாக்கி வைத்துள்ளனர். இவர்களின் பெயர் பட்டியலை, மக்களின் பார்வைக்காக வைத்த நிர்வாகம், 15 நாட்களுக்குள் செலுத்த கெடு விதித்தது.***

கோயில் வளாகத்தில் 110 பூக்கடைகள், வளையல் கடைகள் உள்ளன. எழுகடல் தெருவில், 156 கடைகளும், பிற பகுதிகளில் 120 கடைகள் மற்றும் புதுமண்டப கடைகள் என 720 கடைகள் உள்ளன. பல தலைமுறைகளாக இக்கடைகளில் வியாபாரம் செய்பவர்களிடம் குறைந்தபட்ச வாடகை வசூலிக்கப்படுகிறது.

2001 நவ.,1ல், அந்தந்த பகுதி சந்தை மதிப்பிற்கேற்ப வாடகை உயர்த்தப்பட்டது. 2004 முதல், மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் வாடகை உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதை, பெரும்பாலான கடைகாரர்கள் ஏற்றுக்கொண்டனர். வெளி பகுதியில் உள்ள சில கடைக்காரர்கள் உயர்த்தப்பட்ட வாடகையை தராமல் காலம்தாழ்த்தினர். நோட்டீஸ் கொடுத்தும் பலனில்லை.

வாடகை பாக்கியை செலுத்தாமலும், கடைகளை காலி செய்யாமல் காலம் தாழ்த்துவதாகவும் புகார் எழுந்தது. நிர்வாக அதிகாரி ஜெயராமன் ஆய்வு செய்ததில், ஒரு கோடி ரூபாய் வரை பாக்கி இருப்பது தெரிந்தது. இதைதொடர்ந்து, அதிகபட்சம் பாக்கி வைத்துள்ளவர்களின் பட்டியலை கோயில் வாசலில், பார்வைக்காக வைத்துள்ளனர். '15 நாட்களுக்குள் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ வாடகை பாக்கியை செலுத்த வேண்டும்; இல்லாதபட்சத்தில், கடையை ஆக்கிரமித்துள்ளதாக கருதி, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என, கோயில் நிர்வாகம் எச்சரித்துள்ளது.



மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கடைகளுக்கு பாக்கி வைத்துள்ளவர்களின் பெயர் பட்டியல், தெற்குகோபுரம் முன் வைக்கப்பட்டுள்ளது.


மதுரை ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் பஸ் ஸ்டாண்டில், ஸ்ரீகாமாட்சி டிராவல்ஸ் அலுவலகத்தை, மேயர் ராஜன் செல்லப்பா திறந்து வைத்தார். அருகில் இடமிருந்து ஒப்பந்தக்காரர் திருநாவுக்கரசு, உரிமையாளர்கள் சுரேஷ், சரவணன்.


மதுரை அப்போலோ மருத்துவமனை டாக்டர்களுக்கான கிரிக்கெட் போட்டியில், வெற்றி பெற்ற டாக்டர் மீனாட்சிசுந்தரம் அணிக்கு, டாக்டர் சீனிவாசன் பரிசு வழங்கினார்.

## லஞ்சம் கேட்டால் 0452 - 253 1395 புகார் செய்யலாம்



லஞ்சம் வாங்குவதும், கொடுப்பதும் குற்றம். அரசு அலுவலகங்களில் லஞ்சம் கேட்கிறார்களா? உங்களிடம் யாராவது லஞ்சம் கேட்டால், புகார் செய்யுங்கள்.

**துணை கண்காணிப்பாளர் லஞ்சஒழிப்புத்துறை டி.எஸ்.பி., அலுவலகம், அழகர்கோவில் ரோடு, அரசு சுற்றுலா மாளிகை அருகில், மதுரை - 625 002.**

## போலீசில் புகார் தெரிவிக்க...

**மதுரையில்**

- காதை செவிடாக்கும் ஒலிபெருக்கி தொல்லையா,
- ரோட்டில் பட்டாசு வெடிக்கிறார்களா
- மொபைல் போனில் பேசியவாறு வாகனம் ஓட்டுகிறார்களா,
- 'பார்க்கிங்'கில் கூடுதல் கட்டணம் வசூலிக்கி றார்களா,
- பெண்களிடம் ஈவ்டீசிங் செய்கிறார்களா,
- பள்ளி, கல்லூரி அருகே மாணவர்களை சீரழிக்கும் போதை பொருள் விற்கிறார்களா.
- உங்கள் வீட்டுச் சுவரில் போஸ்டர் ஒட்டுகிறார்களா.

**நகர் துணைக் கமிஷனர் திருநாவுக்கரசிடம் தெரிவிக்க 87544 33007.**

**கமிஷனர் அலுவலகம்: 0452 - 235 0760**

**மாவட்ட எஸ்.பி., பாலகிருஷ்ணனிடம் தெரிவிக்க 94897 09003.**

(எஸ்.எம்.எஸ்., மூலமும் தெரிவிக்கலாம்)

## இன்றைய நிகழ்ச்சி 5.11.2012

இலவசமாக வெளிவரும் இப்பகுதியில் உங்கள் சங்க அமைப்பு, கோயில், பள்ளி, கல்லூரி , பொது, ஆன்மிக, வர்த்தக நிகழ்ச்சிகளை வெளியிடுகிறோம். உங்கள் நிகழ்ச்சி இடம்பெற இன்றைய நிகழ்ச்சி, தினமலர், மதுரை-625 016 என்ற முகவரிக்கு விபரங்களை அனுப்பலாம்.

இ-மெயில்: **mdureporting@dinamalar.in** **பேக்ஸ்: 0452 - 238 0907**

**கோயில்**

- ★ கூட்டுத்தியானம்: தியான மையம், 12 -அரவிந்தர் அவென்யூ, திருநகர், ஏற்பாடு: அரவிந்தர் அன்னை டிரஸ்ட், மாலை 5.30 மணி.

**பக்தி சொற்பொழிவு**

- ★ கடம்பவன புராணம்: நிகழ்த்துபவர்: புலவர் சுந்தரராமன், பன்னிரு திருமுறை மன்றம், தெற்காடிவீதி, மீனாட்சி அம்மன் கோயில், மதுரை, இரவு 7 மணி.
- ★ கந்தர்அனுபூதி: நிகழ்த்துபவர்: உமாராணி, திருவள்ளுவர் மன்றம், சக்திவேலம்மாள் நகர், எஸ்.எஸ்.காலனி, மதுரை, மாலை 5 மணி.
- ★ கீதை வகுப்பு: நிகழ்த்துபவர்: சுவாமி ஸமானந்தர், ஆயிரம் வைசியர் துவக்கப்பள்ளி, தெற்காவணி மூலவீதி, மதுரை, மாலை 6.45 மணி.
- ★ கொல்லாமையே நல்தீபாவளியே: நிகழ்த்துபவர்: சங்கரானந்தம், இம்மையில் நன்மைதருவார் கோயில், மேலமாசிவீதி, மதுரை, மாலை 6.30 மணி.
- ★ திருமந்திரம்: நிகழ்த்துபவர்: திருமாவளவன், மதுரை திருவள்ளுவர் கழகம், வடக்காடிவீதி, மதுரை, இரவு 7 மணி.

**பொது**

- ★ காட்டன் திருவிழா - ராஜஸ்தான் டயமண்ட் விற்பனை: செல்லம் சரஸ்வதி மகால், காமராஜர் ரோடு, மதுரை, காலை 10 முதல் இரவு 9 மணி வரை.
- ★ இந்தி பேச்சு பயிற்சி: காந்திமியூசியம், மதுரை, மாலை 5 மணி.
- ★ தர்ணா: யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி, மேலவெளிவீதி, மதுரை, ஏற்பாடு: பொது இன்சூரன்ஸ் ஓய்வூதியம் பெறுவோர் சங்கம், காலை 10.30 மணி.
- ★ டெங்கு விழிப்புணர்வு: அண்ணாதோப்பு, எல்.என்.பி.நகர், மதுரை, ஏற்பாடு: தானம் அறக்கட்டளை, மாலை 6.30 மணி.
- ★ குழந்தைகளுடன் சந்திப்பு நிகழ்ச்சி: உபகார் மதுரை, பார்வையற்றோர் மாணவர் விடுதி, முத்துப்பட்டி, மதுரை, சிறப்புரை: கண்ணதாசன் நற்பணி மன்ற தலைவர் சொக்கலிங்கம், இரவு 7.20 மணி.
- ★ ஓவிய பயிற்சி: சித்ரகலா ஓவியப் பயிற்சி, ஜெய்ஹிந்த்புரம் 1வது தெரு, மதுரை, காலை 10 மணி.
- ★ நீச்சல் பயிற்சி: ரேஸ்கோர்ஸ் மைதானம், மதுரை, ஏற்பாடு: விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், காலை 6 முதல் மாலை 6.30 மணி.
- ★ ஒலி - ஒளி காட்சி: திருமலை நாயக்கர் மகால், மதுரை, ஆங்கில காட்சி, மாலை 6.45 மணி, தமிழ் காட்சி, இரவு 8 மணி.

**பள்ளி, கல்லூரி**

- ★ கருத்தரங்கு: அண்ணா பல்கலை, மதுரை, தலைப்பு: ஆராய்ச்சி அளவீடு நுட்பங்கள், பேசுபவர்: பேராசிரியர் காசிலிங்கம், காலை 10 மணி.
- ★ சூரியமூர்த்தி மணி நினைவு சொற்பொழிவு: மதுரை காமராஜ் பல்கலை, பங்கேற்பு: துணைவேந்தர் கல்யாணி, மாலை 3 மணி.
- ★ என்.எஸ்.எஸ்., முகாம் துவக்க விழா: மேலமாத்தூர், ஏற்பாடு: ஓ.சி.பி.எம்., பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மதுரை, மாலை 5 மணி.
- ★ இலவச கால்நடை மருத்துவ முகாம்: வெள்ளியங்குன்றம், ஏற்பாடு: எம்.எ.வி.எம்.எம்., மேல்நிலைப் பள்ளி, மதுரை, காலை 9 மணி.
- ★ இலவச டெங்கு மருத்துவ முகாம்: லதா மாதவன் பொறியியல் கல்லூரி, கிடாரிப்பட்டி, காலை 10 மணி.
- ★ என்.எஸ்.எஸ்., முகாம்: கிளானேரி, ஏற்பாடு: ஜெயராஜ் நாடார் மேல்நிலைப் பள்ளி, இலவச மருத்துவ முகாம், காலை 9 மணி.

**யோகா, தியானம்**

- ★ ஆழ்நிலை தியானம்: காந்திமியூசியம், மதுரை, ஏற்பாடு: மகரிஷி ஆழ்நிலை தியான மையம், காலை 11 மணி, மாலை 5 மணி.
- ★ இலவச யோகா: கூடலழகர் கோயில், மதுரை, மாலை 5.30 மணி.
- ★ யோகா: காந்திமியூசியம், மதுரை, காலை 6 மணி, 10.30 மணி, மாலை 5 மணி.
- ★ யோகா: மனவளக்கலை தவமையம், சோழவந்தான், காலை 6.30 மணி, மாலை 5.30 மணி.
- ★ இலவச யோகா: நூறுகால் மண்டபம், மீனாட்சிகோயில், மதுரை, காலை 6 மணி.
- ★ ஆழ்நிலை தியானம்: மகரிஷி வேத விக்யா பவன், 25/34 கிருஷ்ணாபுரம் 4வது தெரு, மதுரை, காலை 9 மணி, மாலை 3 மணி.
- ★ யோகா: சி.எஸ்.ஐ., தொடக்கப்பள்ளி, சோழவந்தான், ஏற்பாடு: யோகா மையம், காலை 6.30 மணி.


மதுரை வேலம்மாள் மருத்துவ கல்லூரியில், அன்னை தெரசா சிலையை, இந்தியன் ஓவர்சிஸ் வங்கி நிர்வாக இயக்குனர் ஷவலி திறந்து வைத்தார். அருகில் கல்லூரி தலைவர் முத்துராமலிங்கம்.

## அடிப்படை வசதியின்றி தவிக்கும் 'சிட்கோ' காலனி மக்கள்

### வழக்கு தொடர முடிவு

புதூர், நவ.5-

மதுரை புதூர் 45 வது வார்டு, 'சிட்கோ' காலனியில், தேங்கி நிற்கும் கழிவுநீர், எரியாத தெருவிளக்குகள், குண்டும், குழியுமான ரோடு என, நரக வாழ்க்கையை மக்கள் அனுபவிக்கின்றனர்.

'சிட்கோ' தொழிற்பேட்டை தொழிலாளர்களுக்காக 170 வீடுகளுடன் காலனி அமைக்கப்பட்டது. இவர்களிடம் வீடு பராமரிப்பு கட்டணம், வரி என 'சிட்கோ' நிர்வாகம் வசூலிக்கிறது. காலனி உருவாக்கப்பட்ட போது தண்ணீர், கழிவுநீர் வாய்க்கால் அமைக்கப்பட்டது.

பின், எந்த பராமரிப்பும் செய்யவில்லை. கால்வாய்களை துார் வாராததால் கழிவுநீர் தேங்கி நிற்கிறது. ரோடுகள் குண்டும், குழியுமாக உள்ளது. தெரு விளக்குகள் எரிவதில்லை. எந்த அடிப்படை வசதியும் இல்லாததால் இப்பகுதியினர் அவதியில் உள்ளனர்.


சதீஷ்பாபு


செல்வி


அபுதாகீர்

**வக்கீல் சதீஷ்பாபு:** 30 ஆண்டுகளுக்கு முன் காலனி அமைக்கப்பட்டது. குழாய்களில் தண்ணீர் வருவதில்லை. மாநகராட்சி குடிநீரும் கிடைக்கவில்லை. குப்பை தொட்டிகள் வைக்காததால் குப்பையை ஆங்காங்கே கொட்டுகின்றனர்.

இதனான் துர்நாற்றம் வீசுகிறது. காலனியை பராமரிக்கும்படி சிட்கோ, மாநகராட்சி அதிகாரிகளிடம் மனு கொடுத்தோம். ஒருவரைக்கொருவர் குறை கூறுகின்றனர். இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். காலனியை பராமரிக்கும் பொறுப்பு யாருக்கு உள்ளது என வழக்கு தொடர உள்ளோம்.

**செல்வி, சிட்கோ காலனி:** கழிவுநீர் வாய்க்கால்கள் அனைத்தும் துார்ந்து விட்டன. தண்ணீர் செல்ல வழியில்லாமல் ஆங்காங்கே தேங்கி நிற்கிறது. மழை நீருடன், கழிவுநீரும் சேர்ந்து வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது. கொசுக்கடியால் நோய் பரவும் அபாயம் உள்ளது. தெருவிளக்குகள் எரியாததால், வழிப்பறி, திருட்டு நடக்கிறது.

**அ.தி.மு.க., கவுன்சிலர் அபுதாகீர்:** அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கும்படி சிட்கோ காலனி பொதுமக்கள் மாநகராட்சியில் கோரிக்கை விடுக்கின்றனர். இப்பகுதியில் 18 லட்சம் ரூபாய் மதிப்பில் ரோடு அமைக்கவும், பாதாள சாக்கடை அமைக்கவும் மாநகராட்சி மதிப்பீடு செய்து, நிதி ஒதுக்கி உள்ளது.

சிட்கோ நிர்வாகம் மாநகராட்சியில் ஒப்படைத்தால்தான் எந்த பணியும் நிறைவேற்ற முடியும். அதிகாரிகள் அதற்கு தயாராக இல்லை. இதனால் எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை, என்றார். புகார் தெரிவிக்க 94434 05990.

## திறப்பு விழா

மதுரை, நவ. 5 -

மதுரை அண்ணா நகரில், எல்.ஜி., 'பெஸ்ட் ஷாப்' திறப்பு விழா நடந்தது.

அரவிந்த் கண் மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் கிம் திறந்து வைத்தார். ஸ்ரீ மீனாட்சி பேன் ஹவுஸ் நிர்வாக இயக்குனர் சரவணன் வரவேற்றார். இணை இயக்குனர் அபிராமி குத்துவிளக்கேற்றினார்.

எல்.ஜி., நிறுவன கிளை மேலாளர் ரமேஷ் வரவேற்றார். மண்டல மேலாளர் சுதிர் முதல் விற்பனையை துவக்கி வைத்தார்.


மதுரை காளவாசலில், 'தி சென்னை மொபைல்ஸ்' முதல் விற்பனையை, எம்.எம்., டிராவல்ஸ் சேர்மன் முத்தலிபு துவக்கி வைத்தார். அருகில் (இடமிருந்து 2வது) நிர்வாக இயக்குனர் சம்சுலி.

## வெடி குண்டு பீதி

புதுார், நவ. 5-

மதுரை புதுார் பாரதியார் ரோடு குப்பைத் தொட்டி அருகில் நேற்று முன்தினம் இரவு மர்ம பார்சல் ஒன்று கிடந்தது. வெடிகுண்டு இருப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

புதுார் இன்ஸ்பெக்டர் சரவணரவி தலைமையில் சோதனையிட்டதில், பழைய பித்தளை செம்பை, 'கிப்ட் பாக்ஸ்' போல் வைக்கப்பட்டிருந்தது. இதனால் போலீசார் நிம்மதி பெருமூச்சுவிட்டனர்.

ஏழு மணி நேரம் உறங்குவது நல்லது


மதுரை புதுார் சிட்கோ காலனியில் வாய்க்கால் துார்வாராததால் தேங்கி நிற்கும் கழிவுநீர்.

## மதுரையில் வடமாநில குழந்தை தொழிலாளர்கள்

மதுரை, நவ. 5-

மதுரை நகரில், பள்ளிக்கு செல்ல வேண்டிய வயதில், பல்வகை பொருட்களை வடமாநில குழந்தை தொழிலாளர்கள் விற்று வருகின்றனர்.

நவ., முதல் ஜன., வரை, 'சீசன்' வியாபாரமாக, பலவகையான பொருட்களை, வடமாநில வியாபாரிகள் இங்கு விற்பனை செய்கின்றனர். பள்ளிக்கு செல்ல வேண்டிய தங்கள் குழந்தைகளையும் வியாபாரத்தில் ஈடுபடுத்துகின்றனர். பெண்கள் மற்றும் சில குழந்தைகள் பிச்சை எடுத்தும் பிழைப்பு நடத்துகின்றனர்.

மீனாட்சி அம்மன் கோயில் பகுதியில், குழுக்களாக வலம் வந்து, பொருட்களை வாங்க கட்டாயப்படுத்துகின்றனர். குழந்தை தொழிலாளர்கள், பின்தொடர்ந்து வந்து, பொருட்களை வாங்குமாறு கெஞ்சுகின்றனர். சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோடு, குழந்தைகளுக்கு கல்வி கற்றுத்தருவதற்கான ஏற்பாடுகளை, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 35 சதவீதம் பேர் 'ஆப்சென்ட்'

மதுரை, நவ.5-

மதுரையில், நேற்று நடந்த டி.என்.பி.எஸ்.சி., குரூப்-2 தேர்வில் 35 சதவீதம் பேர் 'ஆப்சென்ட்' ஆயினர்.

திருமங்கலம், உசிலம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், 133 மையங்களின் காலை குரூப்-2 தேர்வு எழுதினர். இதில், அழைக்கப்பட்ட மொத்தம் 38,640 பேரில், 35 சதவீதம் பேர் 'ஆப்சென்ட்' ஆயினர்.

அனைத்து மையங்களிலும் வீடியோ பதிவு செய்யப்பட்டது. மதியம் குரூப்-7 தேர்வு நடந்தது. இதில் 15 ஆயிரம் பேர் தேர்வு எழுதினர். மதுரை டி.ஆர்.ஓ., ரவீந்திரன் தலைமையில், வருவாய் அதிகாரிகள் தேர்வுக்கான ஏற்பாடுகளை செய்தனர்.


மதுரை அண்ணாநகர் 'எல்ஜி., பெஸ்ட் ஷாப்பை', டாக்டர் கிம் திறந்து வைத்தார். அருகில், இடமிருந்து கிளை மேலாளர் ரமேஷ், மண்டல மேலாளர் சுதிர், மீனாட்சி பேன் ஹவுஸ் நிர்வாக இயக்குனர் சரவணன், துணை இயக்குனர் அபிராமி.


நெல்லை வண்ணாரப்பேட்டையில், தங்கமயில் ஜுவல்லரியின் புதிய கிளையை ஆரெம்கேவி நிர்வாக இயக்குனர் தியாகராஜன் திறந்து வைத்தார். இடமிருந்து தங்கமயில் இணை நிர்வாக இயக்குனர் குமார்.